## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

வரையறுக்கப்பட்ட இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியின் ('கம்பனி") 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனங்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புகள் மற்றும் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றுடன் கூடிய 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக்கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்க வேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து, கம்பனியின் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பெனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது. கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் ˙ வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வு விடயப் பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கம்பனிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை

மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இயலுமான அளவில் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கம்பனி/ கூட்டுத்தாபனம்/ சபை/ அதிகாரசபையின் *(பொருத்தமானவாறு)* செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கம்பனி/ கூட்டுத்தாபனம்/ சபை/ அதிகாரசபையின் *(பொருத்தமானவாறு)* ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கம்பனி/ கூட்டுத்தாபனம்/ சபை/ அதிகாரசபை *(பொருத்தமானவாறு)* இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக் கூற்றுக்களை தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடன் தொடர்புடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 32 ஆம் பந்தியின் பிரகாரம் நிறுவனம் ஒன்றினால் நியமம் ஒன்றின் மூலம் தேவைப்படும் அல்லது அனுமதி அளிக்கப்பட்டிருக்கும் போது தவிர சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடு செய்யப்பட முடியாத போதும் வெளிநாட்டு | குறித்த சீதாக்கத்தை மேற்கொண்டு 2023 கணக்காண்டின் போது சமர்ப்பிப்பதாக | இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இங்க சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் சரியாக காண்பிக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | வேலை வாய்ப்பு கம்பனியிடமிருந்து அறவிடப்படப்பட வேண்டிய ரூபா 2,547,728 ஆன மீதி செலுத்த வேண்டிய தொகையிலிருந்து கழிக்கப்பட்டு நிதிநிலைமை கூற்றில் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் காரணமாக செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய மீதிகள் அப் பெறுமதியால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது | | வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும் |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 12 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்காக பிற்போரப்பட்டு வரி கணக்கிடப்படாது இருந்ததுடன் 2017 ஆம் ஆண்டு முதல் இருந்து வரும் 264,653 ஆன பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் மீதி மாத்திரம் நிதிநிலைமை கூற்றில் நடைமுறை அல்லா சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் ஆண்டிலிருந்து உரிய பிற்போடப்பட்ட வரியை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | பிற்போடப்பட்ட வரி பெறுமானத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 34 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியிடமுள்ள ரூபா 74,370,330 கிரய பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக 2013 ஆம் ஆண்டின பின்னர் மீள் மதிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டு அவற்றின் நியாயமான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கியிருக்கவில்லை. | பெறுமானத் தேய்வு பூர்த்தி செய்யப்பட்டுள்ள எனினும் இதுவரை பயன்படுத்தப்படுகின்ற ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை இனங் காண்பதற்கும் மீள் மதிப்பீடு செய்ய வேண்டிய ஆதனங்கள் மற்றும் உபகரணங்கள் இனங்கஅணப்பட்டு மீள் மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் சரியான பெறுமதியை அளவிடுவதற்காக சுயாதீன கணக்காய்வு நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 51 ஆம் பந்தியின் பிரகாரம் கம்பனியினால் வருடாந்த பெறுமானத் தேய்வினைக் கணக்கிடும் போது அந்த சொத்துக்கள் தொடர்பாக எஞ்சிய பெறுமதி மற்றும் பயனுள்ள ஆயுட்காலம் மீளாய்வு செய்யப்படாததன் காரணமாக மேலும் பயன்படுத்தப்பட்டு வரும் கிரயம் ரூபா 10,675,735 ஆன 323 தளபாடங்கள் மற்றும் பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் முகப்புப் பெறுமதி பூச்சியமாக காணப்பட்டது. அம்மதிப்பீட்டு வழுவை இலங்கை கணக்கீட்டு நியமம் 8 இன் பிரகாரம் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தளபாடங்கள், பொருத்திகள் மற்றும் அலுவலக உபகரணங்களின் கீழ் இனங்காணப்படாத ரூபா 1,341,146 கூட்டுத் தொகையான மீதிகளாக மீளாய்வாண்டின் நிதிக கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருந்தது. | நிறுவனத்தினால் பயன்படுத்தப்படும் அனைத்து ஆதனங்கள் பொறிகள் மற்றும் உபகரணங்கள் சரியாக மீள் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியுடனான நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றை தயாரிப்பதன் மூலம் ஆண்டின் போது பிழையாக கணக்கிடப்பட்ட பெறுமானத்தேய்வு கணக்கிடலை எதிர்காலத்தில் சரியாக கணக்கிட முடியும். | இனங்காணப்படாத மீதிகளை கண்டறிந்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ள வேண்டிய பண மீதி ரூபா 2,460,744 ஆக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், பணியகத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், அந்த பெறுமதி ரூபா 3,019,704 ஆக காண்பிக்கப்பட்டிருந்த காரணத்தால் ரூபா 558,960 ஆன வேறுபாடு இருந்தது | இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் அட்டவணைகளின் பிரகாரம் மீதி மற்றும் இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஏஜன்சியிலிருந்து பெறவேண்டிய மீதிக்கு இடையே வேறுபாட்டை பரீட்சித்து வேறுபாட்டை சீராக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான பெறுமதியை நிதிக் கூற்றுக்களில் பதிவு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | அனர்த்தத்திற்கு உட்படும் புலம் பெயர் தொழிலாளர்களுக்கு கொடுப்பனவு செய்வதற்கு 2013 ஆம் ஆண்டின் போது இலாபத்திலிருந்து ஒதுக்கீடு செய்த நிதி ஏற்பாட்டில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் காணப்பட்ட ரூபா 1,858,941 மீதியை ஒதுக்கமொன்றமாக காண்பிப்பதற்கு பதிலாக செலுத்த வேண்டிய மீதியொன்றாக காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டின் போது உரிய தொகையை நிதி ஒதுக்கீடாக காண்பிக்கப்பட்டு சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | இக் கணக்கீட்டு தவறினை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொழிலாளர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கம்பனிககளிலிருந்து பெறவேண்டிய (invoice receivable) ரூபா 4,719,320 ஆன மீதியொன்று காணப்பட்டதுடன் அம்மீதி 05 ஆண்டுகளுக்கு மெற்பட்ட காலமாக இருந்து வரும் ரூபா 3,772,364 ஆன மீதியொன்றாக காணப்பட்டது. | இத்தொகையை அறவிடுவதில் உள்ள சிக்கல் தொடர்பாக விசாரித்துள்ளதுடன் எதிர்காலத்தில் பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாக | இத்தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கம்பனியால் தனியார் நிறுவனம் ஒன்றுடன் ஏற்படுத்தக் கொண்ட உடன்படிக்கையின் பிரகாரம் ஆரம்பிக்கப்பட்ட இன்சிலாப் நிறுவனத்தை நடாத்திச் செல்வதற்காக கட்டிடம் ஒன்று வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டு அதற்காக ரூபா 600,000 ஆன முற்பணமொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் தற்போது கட்டிடத்திலிருந்து வெளியேறி இருந்த போதும் அக் கட்டிடம் தொடர்பில் விசாரணை செய்யப்படும் வழக்கொன்று காரணமாக அறவிடுவதற்கு முடியாதிருந்தது. | தற்போது வழக்கொண்று காணப்படுவதால் ரூபா 600,000 ஆன முற்பணத் தொகையை மீண்டும் அறவிடுவதற்கு முடியாதுள்ளதுடன் குறித்த வழக்குக்காக நிதிஏற்பாடு எதிர்வரும் ஆண்டுகளில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்போம் | கம்பனிக்கு பாதகமான வகையில் அல்லாத பிரகாரம் வழக்கு நடவடிக்கைகளை பூர்த்தி செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டு ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் பெறவேண்டிய ரூபா 1,118,392 கூட்டுத்தொகையான நிறுத்தி வைத்தல் வரி மற்றும் ரூபா 1,340,623 ஆன பெறுமதி சேர் வரி மற்றும் ரூபா 211,225 ஆன காப்புறுதி தவணை என்பவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | குறித்த வரி கொடுப்பனவு நிர்ணயிக்கப்பட்ட பிரகாரம் மேற் கொள்ளப்பட்டுள்ளதுடன் இக் கணக்கு வைப்பின் போது இடம்பெற்றுள்ள தவறு ஒன்று ஆகும். 2023 ஆம் ஆண்டின் போது சீராக்கப்படும். காப்புறுதி தொகையையும் பணியகத்திற்கு அறிவுறுத்தப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் | பெற வேண்டிய கணக்குகள் மீதிகளைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**1.6.2 செலுத்த வேண்டிய தொகை**

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரிய வெளிநாட்டில் தொழிலுக்காக சென்று உயிரிழந்த தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய மொத்தம் ரூபா 6,289,993 ஆன மரண இழப்பீட்டை 2023 யூன் 31 ஆந் திகதி வரை விடுவிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் இழப்பீட்டு தொகையை கொடுப்பனவு செய்வதற்கு பரிந்துரைக்கப் பட்ட இழப்பீட்டாளர்களின் பெயர் பதிவேடு கிடைத்த பின்னர் மேற்கொள்வதாக | தொழிலாளர்களுக்காக கிடைக்கப் பெற்றுள்ள மரண இழப்பீட்டினை செலுத்தி விடுவிப்பதற்கு முடியாமைக்கான காரணங்களைக் கண்டு பிடித்து விரைவில் விடுவிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய மீதி ரூபா 82,242,065 ஆக இருந்துடன் அதில் ரூபா 43,662,769 தொகை 05 ஆண்டுகளுக்கும் 15 ஆண்டுகளுக்கும் இடைப்பட்ட காலமாக இருந்து வரும் ஒரு மீதியாகும். அம்மீதியை முறையாக இனங்கண்டு பணத்தை செலுத்துவதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | கருத்துரை தெரிவிக்கவில்லை. | செலுத்தப்பட வேண்டிய தரப்பினர் இனங்காணப்ப ட்டு பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு இணங்காமை**

| | சட்டங்கள், விதிகள், ஒழுங்கு விதிகள் என்பவற்றின் தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2018 யூலை 17 ஆந் திகதிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் | | | |
| | i. 40(i) ஆம் பிரிவு | இச்சட்டத்தின் கீழ் கணக்காய்வு செய்யப்படுகின்ற | இவ்வாண்டிலிருந்து உள்ளக கணக்காய்வினை | செயற்திறனான உள்ளக கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்கு |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனத்தில் உள்ளக கணக்காய்வினை மேற்கொள்வதற்காக அந்நிறுவனத்தின் கட்டுப்பாட்டு சபையினால் உரிய வகையில் நியமிக்கப்படுகின்ற தமது உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் இருக்க வேண்டிய போதிலும் வெளிநாட்டு தொழில் ஏஜன்சி கம்பெனியின் ஆரம்பம் முதல் இதுவரை உள்ளக கணக்காய்வு பிரிவு ஒன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக | நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| ii. 41(2)(எ) | குறித்த நிர்வாக சபையால் தமக்கு ஒத்துழைப்பதற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரை தெரிவிக்கவில்லை. | முறையான உள்ளக கட்டுப்பாடொன்றை ஏற்படுத்துவதற்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவொன்று தாபிக்க நடவடிக்கை எளடுக்கப்படும் |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 37,691,612 ஆன இலாபமொன்றாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நட்டம் ரூபா 15,326,918 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவில் ரூபா 53,018,530 ஆன அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்கு வெளிநாடு செல்வதற்காக தொழிலாளர் ஆட்சேர்ப்பு வருமானம், விமானப் பிரயாணச் சீட்டு வழங்கல் மூலம் கிடைத்த வருமானம் மற்றும் நிலையான வைப்பு வட்டி வருமானம் அதிகரித்ததமையு இந்த அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.2 பிரதான பிரதான வருமானம் மற்றும் செலவின போக்கு பகுப்பாய்வு

(அ) 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் வெளிநாடு செல்லல் 114 சதவீதத்தினால் அதிகரித்திருந்த காரணத்தினால் மீளாய்வாண்டில் தொழிலாளர்கள் வெளிநாடு சென்றதால் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 14.69 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் அது திரட்டிய வருமானத்தில் 23 சதவீதமாக இருந்தது.

(ஆ) வெளிநாட்டு தொழில் ஏஜன்சி கம்பனி மூலம் விமான நுழைவு சீட்டுகள் விநியோகிக்கப்பட்டு வருவதுடன் 2021 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக அதன் மூலம் கிடைத்த வருமானம் ரூபா 52.2 மில்லியானால் அதிகரித்து இருந்ததுடன் அது மொத்த வருமானத்தில் 63 சதவீதமாக இருந்தது.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரசாங்கத்தின் முழு உருத்தினை உடையதாக ஆரம்பிக்கப்பட்டிருந்த கம்பனி மூலம் அரசின் பாதுகாப்பின் பேரில் ஒப்பீட்டளவில் குறைந்த கிரயத்தில் மட்டுப்படுத்தல் ஒன்று இல்லாமல் இலங்கை தொழிலாளர்களை தொழிலுக்காக அனுப்புவதற்கு முடியுமாக இருந்த போதும் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 2561 மற்றும் 2860 ஆன தொழில் கட்டளைகள் கிடைத்திருந்த போதும் தொழிலுக்காக வெளிநாடு சென்ற அளவு முறையை 155 மற்றும் 333 ஆக இருந்தது அது கிடைத்த தொழில் வாய்ப்புகளில் 4 சதவீதம் மற்றும் 13 சதவீதமாக இருந்தமையால் கம்பனியின் பிரதான நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது | கொரோனா உலகளாவிய தொற்று மற்றும் நாட்டில் காணப்பட்ட பொருளாதார ஸ்திரமாற்ற நிலமை காரணமாக 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக<br><br>வெளியேறுதல் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 2022 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டிலிருந்து அதில் தெளிவான அதிகரிப்பொன்றை அடைந்து கொண்டுள்ளதாக | கம்பனியை தாபித்த நோக்கங்களின் பிரதான நோக்கங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும் |
| (ஆ) | வியாபார மேம்படுத்த நடவடிக்கைகளுக்குக மீளாய்வாண்டில் ரூபா 1,905,932 ஆன நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 393,988 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளிநாட்டு தொழிலுக்கான ஆட்சேர்த்தல் மேம்படுத்தும் நடவடிக்கைகள் போதியளவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டு முதல் நாட்டில் ஏற்பட்ட வெவ்வேறு பொருளாதார தாக்கங்கள் காரணமாக நிறுவனத்தினதும் பொருளாதார ரீதியாக ஸ்திரமற்ற நிலைமையொன்றுக்கு முகம் கொடுத்த நேர்ந்தமையால் வியாபார மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அதிக அளவில் முதலீடு செய்தல் குறைவடைந்தது. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (இ) | 1996 அமைப்பு அகவிதியில் 2017 செப்டம்பர் 28 ஆம் திகதி விசேட முன்மொழிவு ஒன்று மூலம் (special resolution) கம்பனியின் வியாபார நடவடிக்கையொன்றாக வெளிநாடு செல்லும் தொழிலாளருக்கான விமான பயணச்சீட்டு வழங்குதலை உள்ளடக்கி கம்பனியால் விமான டிக்கெட் வழங்கும் பிரிவொன்று தவிக்கப்பட்டிருந்தது எனினும் அங்கீகரிக்கப்பட்ட | இலங்கை வெளிநாட்டு தொழிலாளர் முகவர் தனியார் கம்பனிக்கு சொந்தமான விமான போக்குவரத்து சேவை அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொள்வதற்காக IATA பயிற்சி சான்றிதழ் பெற்றுக்கொள்ள வேண்டிய உத்தியோகத்தர்கள் இல்லா | கம்பனியின் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குாக தேவையான சட்டப் பின்னணியொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பதவியணியில் அதற்குரிய பதவியை அங்கீகரிப்பதற்கோ பயிற்சி பெற்ற பதவியணியொன்றை நியமிப்பதலோ இடம் பெறாமல் இருந்ததுடன் விமான போக்குவரத்து சேவை அனுமதிப்பத்திரத்தை (IATA) சட்ட ரீதியாக பெற்றுக்கொள்ளலோ இடம் பெற்றிருக்கவில்லை. அதன் காரணமாக முகவர் நிறுவனங்களின் ஊடாக விமான டிக்கெட் வழங்கும் சேவைகள் நிறைவேற்றப்பட்டமையால் வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு விமான டிக்கெட்களை கொள்வனவு செய்யும் போது கூடிய கொடுப்பனவு ஒன்றினை செய்ய நேர்ந்திருந்தது. | த இருந்தமையால் பணியகத்தின் முகாமைத்துவுத்தின் அங்கீகாரத்தின் பேரிலும் இந்த உத்தியோகத்தர்களின் ஒத்துழைப்பு அடிப்படையில் குறித்த விமான டிக்கெட் நிறுவனம் 2021.01.26 ஆந் திகதி ஆரம்பிக்கப்பட்டதாகவும் 2023 ஆம் ஆண்டில் எமது நிறுவனம் இலாபம் உழைக்கும் நிலைக்கு கொணடு வரப்பட்டுள்ளதாகவும் விமான டிக்கெட் பயிற்சியளித்தல் IATA சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கான உத்தியோகத்தர் ஒருவருக்கு பயிற்சியளித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது | |
| (ஈ) | கம்பனிக்கான அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் கம்பனியின் பொது முகாமையாளர் பதவிக்காக வெளியக அல்லது உள்ளக ரீதியாக விண்ணப்பங்களைக் கோரி நிரந்தர அடிப்படையில் உத்யோகத்தர் ஒருவர் ஆட்சேர்ப்பு செய்யப்படாமல் கம்பனி ஆரம்பத்திலிருந்து இதுவரை 26 ஆண்டு காலப்பகுதியினுள் 16 பொது முகாமையாளர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். 2000 ஆம் ஆண்டின் பின்னர் 11 சந்தர்ப்பங்களில் பணியகத்தின் 09 உத்தியோகத்தர்கள் பதிற்கடமை அடிப்படையில் முறையான நடைமுறையொன்றினை பின்பற்றாது அதன் பொது முகாமையாளராக சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் . | பொது முகாமையாளர் பதவிக்காக சம்பளம் மற்றும் ஏனைய பணிகளை வழங்குவதற்கு நிறுவனத்தின் நிதி மட்டம் பலமாக இல்லாமல் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியத்தின் கீழ் துணை நிறுவனமான எமது கம்பனிக்கு பணியகத்திலிருந்து அதற்கான தகைமை மற்றும் அனுபவமுள்ள உத்தியோகத்தர்களை அதன் மேல்மட்ட முகாமை மூலம் நியமிக்கப்பட்டுள்ளதாக | அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் தகைமையுடனான பதவியணியொன்று நிரந்தரமாக ஆட்சசேர்ப்பு செய்யப்பட்டு கம்பயின் நடவடிக்கைகளை செயற்திறனாக நடத்திச் செல்லப்பட வேண்டும் |

**3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கம்பனியின் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டத்தின் பிரகாரம் 05 முறைமைகள் மூலம் 49 புதிய தொழில் கட்டளைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ரூபா 2.2 மில்லியன் மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதும் ரூபா 1.2 மில்லியன் செலவழித்து 22 தொழில் கட்டளைகள் மாத்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயன்முன்னேற்றம் சமர்ப்பிக்கப்பட்டதாக | செயல் நடவடிக்கை திட்டத்தை முறையாக திருத்தம் செய்து அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2004 பெப்ரவரி 24 ஆந் திகதிய 1/2004 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 2021 நவம்பர் 16 ஆந் திகதிய 01/2021 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களை கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் கம்பனியினால் 80 நாட்கள் தாமதித்து 2023 மே 19 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | 2022 ஆம் ஆண்டிற்குரிய நிதி கூற்றுக்கள் 2023 ஜனவரி 30 ஆம் தேதி அளவில் பூர்த்தி செய்யப்பட்ட போதும் நிதி கூற்றுக்களின் மாதிரியின் படிவத்தில் மாற்றங்களை மேற்கொள்வதற்கு பணிப்பாளர் சபையால் ஆலோசனை வழங்கப்பட்டு இருந்தது குறித்த மாதிரி படிவத்தில் மாற்றங்கள் செய்யப்பட்ட பின்னர் மீண்டும் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டு குறித்து அங்கீகாரத்தை பெற்று பெற்றதன் பின்னர் நிதி கூற்றுக்களை வழங்குதல் இடம்பெற்றதாக | நிதிக்கூற்றுக்களை உரிய திகதியில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |